இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 25-09-2024

# முகமும் குணமும் மாறுமா?

**இலங்கைக்கு புதிய அதிபர் வந்து விட்டார். அந்த நாட்டின் முகமும் குணமும் மாறுமா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி ஆகும்.**

வகுப்புவாத - இனவாத - எதேச்சதிகார அரசாட்சியாக நடைபெற்று அனைத்து வகையிலும் மிகமோசமான விமர்சனங்களுக்கு உள்ளான நாடாக இலங்கை இருந்து வந்துள்ளது. மகிந்த ராஜபக்சேவின் ஸ்ரீலங்கா தேசியக் கட்சியாக இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கேவின் ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்து, ஒரே மாதிரியான இனவாதத் தன்மையுடன் அந்த நாட்டை வழிநடத்தியதன் விளைவாக ஈழத் தமிழினம் அடைந்த துன்ப துயரங்கள் சொல்லி மாளாது.

சிங்களவர்களுக்காவது நன்மை செய்தார்களா என்றால் அதுவும் இல்லை. மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்கு அந்த நாட்டைத் தள்ளினார்கள்.

இதோ இப்போது இலங்கை அதிபர் தேர்தல் நடந்து, புதிய அதிபராக அனுர குமார திசநாயக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தி முன்னணி என்ற கூட்டணியின் வேட்பாளராக இவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். இப்போது இலங்கை அதிபராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கே மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, அதிபர் தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச இரண்டாவது இடத்தையே பெற்றார். மிகக் கொடூரமான பேர் பெற்ற மகிந்த ராஜபக்ஷேவின் மகன், நாமல் ராஜபக்ஷேவும் போட்டியிட்டார். அவரும் தோற்றுப் போனார்.

இலங்கைக்கு இது 9 ஆவது அதிபர் தேர்தல் ஆகும். 38 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.) கட்சித் தலைவரான அனுர குமார திசநாயக, தேசிய மக்கள் சக்தி முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கி அதன் சார்பில் இவர் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார். ஜே.வி.பி. எனப்படும் இந்த கட்சி இடதுசாரிக் கொள்கை கொண்ட கட்சியாக தன்னை அறிமுகம் செய்து கொண்ட கட்சியாகும். மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கொள்கை கொண்டதாக தன்னை அறிவித்துக் கொண்ட கட்சி. இதன் மூலமாக இலங்கையின் முதல் கம்யூனிஸ்ட் அதிபர் என்று இவரை அழைக்கலாம்.

2019 ஆம் ஆண்டு இவர் உருவாக்கிய தேசிய மக்கள் சக்தி முன்னணி கூட்டணியானது மொத்தமே 3 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்றது. ஆனால் இப்போது நடைபெற்ற தேர்தலில் 55.89 விழுக்காடு வாக்குகளை இவர் பெற்று அதிபர் ஆகி இருக்கிறார். அவரை அடுத்து வந்த சஜித் பிரேமதாச, 44.11 விழுக்காடு வாக்குகளையே பெற முடிந்தது.

**இந்த தேர்தல் முடிவுகளின் மூலமாக இலங்கையின் முக்கியக் கட்சிகள் இரண்டையும் அந்த நாட்டு மக்கள் நிராகரித் திருக்கிறார்கள். இடதுசாரி இயக்கத்தின் மீது தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.**

ஜனதா விமுக்தி பெரமுனா என்ற இயக்கத்தின் தொடக்க காலம் கசப்பானது ஆகும். ஆயுத வழியே சரியானது என்பதில் உறுதியாக இருந்த கட்சி அது. இலங்கைத் தமிழர் பகுதியில் போராளிகள் அமைப்புகள் இருந்ததைப் போல சிங்களப் பகுதியில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை இந்தக் கட்சி நடத்தியது. 1970 ஆம் ஆண்டுகளில் சுமார் 13 ஆயிரம் பேர் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டார்கள்.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான போது அதனையும் இந்தக் கட்சி எதிர்த்தது. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு கூடாது என்று இந்தக் கட்சி சொன்னது. இந்திய நாட்டின் நடவடிக்கைகளுக்கு எதிராக மிகப்பெரிய கிளர்ச்சி நடத்தியது. அதிலும் இரண்டு தரப்பிலும் பலரும் கொலையுண்டார்கள். அதிலும் பல்லாயிரக்கானவர்களை இக்கட்சி இழந்தது. அப்போது மாணவராகக் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார் அனுர குமார திசநாயக.

இலங்கையில் இருக்கும் சிறுபான்மையினர் உரிமையை மறுத்த கட்சியாகத்தான் ஜே.வி.பி. இருந்தது. அதனை வன்முறை வழியாகச் சென்று போராட்டம் நடத்தியது. ஆனால் காலப் போக்கில் வன்முறைப் பாதையை அக்கட்சி விட்டுவிட்டது.

**சிங்களவர் - தமிழர்கள் - இசுலாமியர் ஒற்றுமை குறித்து பேசத் தொடங்கியது. 2016 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக இந்த மாற்றத்தை உணர்த்தியது ஜேவிபி.**

**இலங்கையில் வாழும் தமிழ் மக்களையும், மற்ற சிறுபான்மை சமூகங்களையும் அதன் பிரச்சினைகளையும் கவனிக்கத் தொடங்கி அது குறித்து பேசத் தொடங்கியது ஜே.வி.பி. அவர்களுக்கு தனித்தனி பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை வலியுறுத்தியது.**

மேலும் இப்போது ஆட்சிக்கு வந்திருப்பது தனிப்பட்ட ஜே.வி.பி. அல்ல. பல்வேறு அமைப்புகள் இணைந்து தேசிய மக்கள் சக்தி முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கி உள்ளன. இக்கூட்டணியின் அதிபராகத்தான் அனுர குமார திசநாயக, நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்பு இந்தியாவின் தலையீட்டை நிராகரித்த அனுர குமார திசநாயக, கடந்த பிப்ரவரி மாதம் இந்தியாவுக்கு வந்திருந்தார். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரையும், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவலையும் சந்தித்தார். இது அவரது கட்சியின், கூட்டணியின் நிலைப்பாடு மாறி இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டு ஆகும்.

**“நூற்றாண்டுகளாக நாம் கண்ட கனவு இறுதியில் நிறைவேறி இருக்கிறது. கனவை நனவாக்க, இந்த நிலத்திற்குப் புதிய தொடக்கம் தேவை. சிங்களர்கள், தமிழர்கள், முஸ்லீம்களின் ஒற்றுமை, புதிய யுகத்தின் தொடக்கமாக இருக்கும். இதன் அடிப்படையில்தான் மறுமலர்ச்சி தோன்றும்” என்று சொல்லி இருக்கிறார் அனுர குமார திசநாயக.**

**இலங்கையின் முகமும், குணமும் இனியாவது மாறுமா? சொன்னபடி நடப்பாரா புதிய அதிபர்?**

## ஒரு கிராம் தங்கம் ரூ. ஏழாயிரத்தை தொட்டுள்ளது!

சென்னை, செப். 25 –

ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ஒரு கிராம் ரூ.7000க்கு விற்பனை ஆகிறது. ஆபரணத்தங்கம் விலை சவரன் ரூ.160 உயர்ந்து ரூ.56,000 தொட்டு புதிய உச்சம் அடைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார சூழ்நிலை, உலகச்சந்தையில் தங்கத்தின் மதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் அரசு துறைகள் முடங்கி பொருளாதாரம் கீழ் நோக்கி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், உலகம் முழுவதும் தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்துள்ளதாகவும், உள்நாட்டு சந்தையில் தங்கம் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து வருவதாகவும், வரும் நாட்களில் மேலும் இது அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் நேற்று தங்கம் சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.56,000க்கு விற்கப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் தற்போது ரூ.7000தை தொட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) சென்னை, காமராஜர் அரங்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் சீத்தாராம் யெச்சூரி அயர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சீத்தாராம் பெச்சூரி அவர்களின் திருவருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், திராவிடர் கழகத் தலைலர் கி.வீரமணி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழுவின் அசோக் தாவ்லே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீக் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேசன் கட்சியின் மாநில செயலாளர் பழ. ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் திருமதி உ.வாசுகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# 3 ஆண்டுகளில் 21 அரசு கலைக் கல்லூரிகள் திறப்பு!

## ‘அறிவியல் அறிஞர் விருதுகள்’ வழங்கும் விழாவில் அமைச்சர் க.பொன்முடி பெருமிதம் !

சென்னை, செப். 25 -

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில், ‘தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருதுகள்’ வழங்கும் நிகழ்ச்சி சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி சிறப்பு விருந்தினராக பங்கேற்று, 2018 முதல் 2021ம் ஆண்டு வரையில் அறிவிக்கப்பட்ட 43 தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.



விழாவில் அமைச்சர் க.பொன்முடி பேசியதாவது: -

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்துக்கு செயலாளர் இல்லாத நிலை நீடித்ததால், 2018 முதல் 2021ம் ஆண்டு வரையில் தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது அறிவிக்கப்பட்டவர்களுக்கு விருது வழங்குவது தாமதமானது. தற்போது, உறுப்பினர் செயலாளர் நியமிக்கப்பட்டு, விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் அறிவியல் துறை மட்டுமல்லாது, கலைப்பாடப்பிரிவிலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். மொத்தத்தில், ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. புதுமை பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு 1000 வழங்கப்படுகிறது.

தற்போது, ‘உயர்வுக்கு படி’ திட்டத்தின் வாயிலாக இடைநிற்றலை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில்,

சென்னை பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டப்படிப்பு சான்றிதழில், பல்கலைக்கழகத்தின் நிர்வாகக்குழு ஒருங்கிணைப்பாளர் கையெழுத்திடுவதால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

விழாவில், உயர்கல்வித் துறை செயலாளர் பிரதீப் யாதவ், தொழில்நுட்ப கல்வி இயக்கக ஆணையர் ஆபிரகாம், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் பிரகாஷ், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்ற உறுப்பினர் செயலாளர் வின்சென்ட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் ஈர்க்கப்பட்டுள்ள

# தொழில் முதலீடுகள் பற்றி பேச தார்மீக உரிமை இல்லை!

## எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம்!

சென்னை, செப்.25 -

‘தொழில் முதலீடுகள் பற்றி பேசுவதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு தார்மீக உரிமை இல்லை’ என அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பதில் அளித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க பயணத்தில் 7,616 கோடி ரூபாய் புதிய முதலீடாக ஈர்க்கப்பட்டு 11 ஆயிரத்து 516 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இன்னும் கூடுதலான முதலீடும், அதிகம் பேருக்கான வேலைவாய்ப்புகளும் உறுதி செய்வதற்கான முதல்கட்ட பணிகள் முடிந்துள்ளன. ஆரம்பம் மட்டுமே!

முதல்கட்ட பணிகள் என்றால், அது ஆரம்பம் மட்டுமே. இன்னும் புரியும்படி சொல்வது என்றால் முதல் அமைச்சரின் வெளிநாட்டு பயணத்தில் முதலீடுகள் செய்ய முன் வந்த அனைத்து நிறுவனங்களோடும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடவில்லை.

உறுதியாக யார், யார் பணியை தொடங்குவார்கள் என்பதை உறுதி செய்து அதன் மூலம் தமிழகத்துக்கு பரவலாக்கப்பட்ட வளர்ச்சி உறுதி செய்யப்படுமா? என்பதை கவனத்தில் கொண்டுதான் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த புள்ளி விவரங்களை ஒப்பிடும் போது ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். பல மாநிலங்கள் யார் அவர்களை அணுகினாலும் முதலீட்டாளர்களுடன் பேச்சு வார்த்தை நடக்கும்போது முதலீடுகள் வருவதாக அறிவித்து விடுகிறார்கள். ஆந்திராவுக்கு தாரை வார்ப்பு ஆனால், தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் போடுவதற்கு முன் பல சுற்று பேச்சு வார்த்தைகள் நடத்தி பெரும்பாலும் உறுதியான முதலீடு வந்து சேரும் என கணித்த பின்னரே ஒப்பந்தம் போடப்படுகிறது.

**ஆந்திராவுக்கு தாரை வார்க்கப்பட்ட ‘கியா நிறுவனம்’!**

எனவேதான் நமது ஒப்பந்தங்களின் நிறைவேறும்



விகிதம் மற்ற மாநிலங்களை விட கூடுதலாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் முதலீட்டை ஈர்த்த லட்சணத்துக்கு உதாரணம் கியா மோட்டார்ஸ் ஒன்றே போதும். 2017ம் ஆண்டு தமிழ்நாட்டில் தொழிற்சாலையை அமைக்க இருந்த தென் கொரியாவின் கார் நிறுவனமான கியா மோட்டார்ஸ் தன் முடிவை மாற்றிக்கொண்டு ஆந்திராவுக்கு போனது. தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய ரூ.12,800 கோடி முதலீடு எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் ஆந்திராவுக்கு தாரை வார்க்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் 2015 மற்றும் 2019ம் ஆண்டுகளில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தொழில்துறை சார்ந்த 197 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அதன்மூலம் 2 லட்சத்து 59 ஆயிரத்து 534 கோடி ரூபாய் முதலீடுகள் வந்து சேரும் என கூறப்பட்டது. ஆனால், இது நாள் வரை 33 சதவீதம் 86 ஆயிரத்து 190 கோடி ரூபாய் தான் ஈர்க்கப்பட்டுள்ளது.

எனவே, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் ஈர்க்கப்பட்டுள்ள முதலீடுகளை குறை சொல்வதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.





சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கிண்டி கிங் நிலைய வளாகத்தில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டடத்திற்காக, இந்திய பசுமைக் கட்டட கவுன்சிலின் தலைவர் அஜித் குமார் ஜோர்டியா சந்தித்து, தங்கம் தரச்சான்றிதழ் மற்றும் பதக்கத்தினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திருமதி.சுப்ரியா சாஹு, பொதுப்பணித் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.